**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.63/2017**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுந்தரம்மாள் | மதம் | : இந்து |
| க/பெ | : நடராஜன் | ஜாதி | : -- |
| வயது | : 51 | கிராமம் | : அகூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**10.04.2026**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 6ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 30.05.1951ம் தேதியிட்டு பண்டுவாடு அவர்களுக்கு பெத்தமந்தடி எழுதி கொடுத்த கிரைய ஆவணம் மற்றும் அதன் தமிழ் மொழிப்பெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் மற்றம் அதன் தமிழ் மொழிப்பெயர்ப்பு வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. என் மாமனார் கோபால் அவர்களின் இறப்பு சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.2047ல் என் மாமியார் மற்றும் என் கணவர் பெயரில் உள்ள கூட்டு பட்டா தாக்கல் செய்கிறேன். **(கூட்டு பட்டா வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 11.06.2015ம் தேதியிட்ட அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அடங்கல் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

17.09.2012ம் தேதியிட்ட வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 02.05.2011ம் தேதியிட்ட வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 17.08.2015ம் தேதியிட்ட வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் மாமனார் கோபால் அவர்களின் வாரிசு சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வாரிசு சான்று வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)